[illegible] தங்க நகைகள்
இன்றே விஜயம் செய்யுங்கள்
ஸ்ரீ முத்துமீனாட்சி ஜீவலரி
152-B, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி - 433164, 329104

*** நகரப்பதிப்பு Registered as a Ne[illegible]

வீரகேசரி
VIRAKESARI
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

மலர் : 67
இதழ் : 42
கொழும்பு தாது வருடம் புரட்டாதி மாதம் 07ஆம் திகதி திங்கட்கிழமை (23.09.1996) ஹிஜ்ரி 1417 ஜ. அவ்வல் பிறை 09 POST BOX 160; PHONE : 320881 (3LINES), FAX : 448205 பக்கங்கள் : 12

ஸ்ரீ மு[illegible]
மீனா[illegible]சி
ஜீ[illegible]லரி
152-B, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி
433164, 329104

அடுத்த ஆண்டில் பாதுகாப்பு அரச செலவினம் குறைக்கப்படும்

பொருளாதார முன்னேற்றம், அபிவிருத்தி பற்றி ஆராய்ந்த மாநாட்டில் ஜனாதிபதி தகவல்

(எஸ்.என்.ஆர்.பிள்ளை)

1997ஆம் ஆண்டு பாதுகாப்புக்கான செலவினம் குறைக்கப்படும். அத்தோடு அரசாங்க செலவினமும் கட்டுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் விசேட செயற்குழுக் கூட்டம், நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை[illegible] ஆராயுமுகமாக நடைபெற்ற இந்த விசேட கூட்டத்தில் ஜனாதிபதி அரசாங்கத்தின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து புள்ளிவிபரங்களுடன் [illegible]

[illegible] ஜனாதிபதி கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்கம் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் [illegible] ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கென [illegible] பெருந்தொகையான நிதியை செலவிட்டுள்ளது. ஆகையால் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கென அடுத்த ஆண்டு பெருந்தொகையான நிதியைச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. இதனால் பாதுகாப்புக்கான செலவினம் குறைந்துவிடும். அத்துடன் அடுத்த வருடம் அரசாங்க செலவினமும் கட்டுப்படுத்தப்படும் என்றார்.

"கோதுமை மாவின் விலை உலக சந்தையில் குறைந்து வருகிறது. [illegible] அதேவேளை அரசாங்கம் கோதுமை மாவிற்கான மானியத்தை குறைத்துள்ளது. இதனால் சேமிக்கப்படும் நிதியைக் கொண்டு பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளலாம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் மூன்றாவது வரவு-செலவு திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் பல யோசனைகளை கூட்டத்தில் முன்வைத்தன.

டெலிகாம் உட்பட [illegible]னைய அரச உடைமைகளை அரச தனியா[illegible] மயப்படுத்தும்பொழுது அரச ஆதிக்கம் [illegible]தும் வகையில் பங்குகள் விற்பனை செய்[illegible] வேண்டும் என பலரும் வலியுறுத்தினர்.

அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்க, மங்கள சமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, கிங்ஸ்லி விக்கிரமரத்ன, தர்மசிறி சேனநாயக்க, பெர்னாட் சொய்சா, எம்.எச்.எம்.அஷ்ரப் மற்றும் ரவி கருணாநாயக்க, பட்டி வீரக்கோன் எம்.பி., ராஜா கொல்லுரே, டியூ குணசேகர ஆகியோரும் கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

காங்கிரஸ் புதிய தலைவர் பதவிக்கு பவார்-கருணாகரன்-முகர்ஜி போட்டி

புதுடில்லி செப்.22,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகியதையடுத்து புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான முயற்சியில் கட்சியின் பழம்பெருந் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

19 உறுப்பினர்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி செயற்குழு புதிய இடைக்கால தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக திங்களன்று (இன்று) கூடுகிறது. ஆனால் புதிய தலைவரைத் தெரிவு செய்வது இலகுவான காரியமாக இருக்க மாட்டாது என்பதை கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பழம்பெருந் தலைவர்களான கே. கருணாகரன், ஷரத் பவார் போன்றோர் தலைமைப்பதவி போட்டிக்கு முன்வரலாம் என அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ராவின் நெருங்கிய நம்பிக்கையாளருமான பிரணாப் முகர்ஜியும் ஒரு போட்டியாளராக கருதப்படுகிறார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி கண்டமை கருணாகரனுக்கு இப்போட்டியில் ஒரு பாதகமாக அமையலாம் என அரசியல் அவதானியான கோப்ரா கூறியுள்ளார். முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் மகாராஷ்டிர மாநில முதலமைச்சருமான ஷரத் பவார் தலைமைப்பதவி போட்டியில் முன்னணி போட்டியாளராக வரலாம் என கட்சியின் பல உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

கட்சியிலிருந்து பிரிந்து சென்ற காங்கிரஸ்காரர்கள் பவாரின் பின்னால் அணி திரளலாம் எனவும் பிரிந்து சென்றோர் கட்சியில் மீண்டும் இணைய பவார் வழிவகுக்கலாம் எனவும் அவதானிகள் கூறுகின்றார்கள்.

இளைய தலைவர்களைப் பொறுத்தவரை ராஜேஷ் பைலட் ஒரு போட்டியாளராக இருக்கலாம். ஆனால் அவர் பிரபலமானவரல்லர் என்று அவதானிகள் கூறுகின்றார்கள். அப்பழுக்கற்ற ஒரு புதிய தலைமையையே கட்சியின் ஒரு பிரிவினர் விரும்புகின்றனர். இந்த பெருமைக்குரியவராக முன்னாள் அமைச்சரான ஏ.கே. அந்தனி விளங்குகிறார்.

கிளிநொச்சியில் மீண்டும் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, செப்-22.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை ஒரு மாத இடைவெளியின் பின்னர் பாதுகாப்புப் படையினர் நேற்று [illegible] மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] படையினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையின்போது 11 படை வீரர்கள் [illegible]ப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதே வேளை விடுதலைப்புலிகள் தரப்பில் அதிக இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர் [illegible]னார். எனினும் ஆகாய மார்க்கத்திலும் [illegible] பீரங்கிகளின் துணையோடும் படையினர் தாக்குதல் நடத்தியதால் அதிக இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாத அந்த அதிகாரி கூறினார். அதே வேளை விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் கணிசமான எதிர்ப்பு இருந்ததாக அவர் தெரிவித்தார்.

[illegible] தாக்குதல் இடம் பெற்றதை புலிகளின் வானொலி ஒலிபரப்பு உறுதிப்படுத்தியது. ஆனால் மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

(ராய்ட்டர்)

"அராஜகம் மீண்டும் நாட்டில் தலைதூக்குவதற்கு நாம் அனுமதியோம்"

நீர்கொழும்பு அசம்பாவித சம்பவத்தை காட்டி தவறான பிரசாரம் என்கிறார் பிரதி அமைச்சர்

(நமது நிருபர்)

"கடந்த ஆட்சியின் போது நடந்த அராஜகங்கள் மீண்டும் உயிர்பெறுவதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு இடம் தரப்போவதில்லை" என்று [illegible] அமைச்சரும், கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த 20ஆம் திகதி நீர்கொழும்பில் நடந்த துப்பாக்கி[illegible] சம்பவத்தை கண்டித்து [illegible] விடுத்துள்ள அவர் நீண்ட அறிக்கை[illegible]

கடந்த [illegible] திகதி வெள்ளிக்கிழமை அன்று நீர்கொழும்பு நகரில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தால் பலர் உயிரிழக்க நேரிட்டது.

இப்படியான செயல்களை எப்போதும் நாம் நியாயப்படுத்தவோ, அனுமதிக்கவோ போவதில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் மர்மமான முறையில் இளைஞர்களை கடத்திச் சென்று அராஜக செயல்களில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புடையவர்களே இவர்கள் என்ற சந்தேகம் இப்பிரதேச மக்களிடம் ஏற்பட்டுள்ளதில் ரகசியமில்லை. இருப்பினும் இப்படிப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி தக்க தண்டனையை வழங்குவதை விடுத்து வேறு வழிகளின் மூலம் இவர்களை தண்டித்ததை எவ்வகையிலும் [illegible]

இந்நாட்டிற்கு அராஜக ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியவர்கள் முன்னைய ஆட்சியாளர்களே என்பதை புதிதாக சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

நமது பிரதேசத்தில் இளைஞர்களை பச்சை பச்சையாக கொன்று குவித்த அராஜக செயல்களுக்கெதிரான ஜனநாயகரீதியிலான விசாரணைகளை ஏற்படுத்திக் கொடுத்தது நமது

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஐயங்கேணியில் இரு முஸ்லிம் பெண்கள் கொலை

ஏறாவூர்,

ஏறாவூர் எல்லைக்கிராமமான ஐயங்கேணியில் கடந்த சனி இரவு 9 மணியளவில் இரு முஸ்லிம் பெண்கள் இனந்தெரியாத கோஷ்டியொன்றால் வாளால் வெட்டியும் கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

றஸீனா உம்மா (38 வயது) என்ற 5 பிள்ளைகளின் தாயாரும் ஆசியா உம்மா (40 வயது) என்ற 7 பிள்ளைகளின் தாயாருமே இவ்வாறு குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டவர்களாவர்.

சம்பவம் இடம்பெற்றபோது இரு பெண்களும் வீட்டு வெளிப்புறமாக உள்ள திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

[illegible] வீட்டில் கிரனைட் ஒன்று வீசப்பட்டது. [illegible] அக்கம் பக்கத்தில் உள்ளோர் வீட்டை விட்டு வெளியேறாது உள்ளே தங்கியிருந்தனர்.

இச்சமயத்தில் ஆயுதங்களு[illegible] முகங்களை மூடிச் சென்ற கோஷ்டி திண்ணையில் படுத்திருந்த இரு பெண்களையும் கொலை செய்துள்ளது.

துன்னாலை மோதலில் இரு புலிகள் பலி

(நமது நிருபர்)

வடமராட்சி துன்னாலையில் வெள்ளியன்று இரவு 11.10 மணியளவில் மூன்று புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்த மோதலின்போது படையினருக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் கைப்பற்றப்பட்டதுடன் கடுங்காயங்களுடன் தீவிரவாதி ஒருவரும் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் காயங்கள் காரணமாக மரணமானார்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், சனியன்று மாலை அம்பாறை மாவட்டம் அம்மன்குளம் என்னும் இடத்தில் படையினர் தீவிரவாதி ஒருவரை சுட்டுக்கொன்றதுடன் ரி.56 ஆயுதம் ஒன்றையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றினர். அதேதினம் புலாவெளி என்னுமிடத்தில் வீதி ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்கினர். படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலையடுத்து அவர்கள் அங்கிருந்தும் பின்வாங்கிச் சென்றனர். இச்சம்பவத்தில் ரிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார். துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சிவிலியன் ஒருவரின் சடலமும் கண்டெடுக்கப்பட்டது.

1998இல் இலங்கையின் 50ஆவது சுதந்திரதின விழா விரிவாக கொண்டாட ஏற்பாடு

(நமது நிருபர்)

நாடு சுதந்திரம் அடைந்து எதிர்வரும் 98ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி 50 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு செங்கடகலபுரியில் விழாவொன்று நடைபெறவுள்ளது.

இதனைவிரிவாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1997ஆம் 98ஆம் ஆண்டுகளின் தேசிய தின வைபவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை ஆணைக்குழு விழா நடத்துவதற்கான தீர்மானத்தை எடுத்துள

(6 ஆம் பக்கம் பார்க்க)

60 வெற்றிடங்களுக்கு 4500 பேர் விண்ணப்பம்

மண்டூர்,

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள தபாலதிபர் பதவிக்கு 4500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக கிழக்குப் பிராந்திய பிரதிதபால் மா அதிபர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார். சுமார் 60 வெற்றிடங்களே உள்ளன. நேர்முகப்பரீட்சையின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்தும் வேலைகள் தற்போது நடைபெறுவதாகவும் பூர்த்தியானதும் கொழும்பு தபால் தலைமையகத்துக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பள உயர்வு, வாழ்க்கை செலவு அலவன்ஸ் கோரி தீபாவளியையடுத்து தொடர்போராட்டம்

தொழிற்சங்க கூட்டமைப்பு பதுளையில் நேற்று கூடி தீர்மானம்

(நமது நிருபர்)

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு கோரியும், வாழ்க்கைச் செலவு புள்ளிக்கான அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தும் தீபாவளி தினத்தை அடுத்து தொடர்ச்சியான போராட்டத்தில் இறங்குவதென பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி நேற்று பதுளையில் கூடி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி போராட்டத்தைக் கடந்த காலங்களில் போன்ற அடையாள வேலை நிறுத்தமாக அன்றி கோரிக்கைகளுக்கு வெற்றி கிடைக்கும் வரை தொடர்ச்சியான போராட்டமாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் நூறுக்கும் மேற்பட்ட தோட்டக் கமிட்டி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பாக எதிர்காலத்தில் அடையாள வேலை நிறுத்தம் என்ற பெயரில் ஒருநாள் அல்லது ஐந்து நாள்கள் நடத்துவதில் பயனில்லை. எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை தொடர்ச்சியான போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற ஏக மனதாகத் தெரிவித்ததையடுத்தே தொடர்ச்சியான போராட்டம் நடத்துவதென தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் தோட்டத்தொழிலாளர்களுக்குத் தற்போதைய விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு மாதச் சம்பளமாக 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவு புள்ளிக்கான அலவன்ஸும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பதுளை கைமன் பீரிஸ் மண்டபத்தில் கூட்டமைப்பின் உப தலைவர்களில் ஒருவரான ஆர்.எம்.கிருஷ்ணசாமியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் அங்கத்துவ தொழிற்சங்கங்களின் சார்பில் பி.வி.கந்தையா, டி.அய்யாத்துரை, எம்.எஸ்.செல்லச்சாமி, ஒ.ஏ.இராமையா, எஸ்.முருகையா, எஸ்.இராமநாதன் வி.டி.தர்மலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆயுள்வேத ஆஸ்பத்திரி தாதிமார் தொழிற்சங்க நடவடிக்கை

(நமது நிருபர்)

அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிமார் தங்களது கோரிக்கையை முன்வைத்து இன்றும் நாளையும் சுகயீன விடுப்பு போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

நாடெங்கிலும் உள்ள 12 ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளை சேர்ந்த தாதிமாரே இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள விருக்கின்றனர்.

நீர்கொழும்பு சூட்டுச்சம்பவம்; குற்றவாளிகளை கைது செய்ய ஜனாதிபதி பணிப்பு

(நமது நிருபர்)

நீர்கொழும்பில் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் மீதான அண்மைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொலீஸ் மா அதிபரைப் பணித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடைபெற்றவுடன் அங்கு சென்று விசாரணை மேற்கொள்ளுமாறு பொலீஸ் குழுவொன்றை அங்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் நேற்று தெரிவித்தது.

நீதிமன்ற தடை உத்தரவை மீறிய தோட்ட அதிகாரி கைது!

நூரளை,

நுவரெலியா நீதிமன்றத்தில் நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மீறிய தோட்ட உதவி அதிகாரியை நுவரெலியா பொலீஸார் கைதுசெய்தார்கள். இத்தோட்ட அதிகாரியை கைது செய்யும்பொழுது அவரிடம் அனுமதிபெறாத கைத்துப்பாக்கி ஒன்றும் தோட்டாக்களும் இருந்தன.

இது சம்பந்தமாக தெரியவருவதாவது கந்தப்பளை கோட்லோஜ் தோட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்காக தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்ட காணியில் தோட்ட நிருவா

(7 ஆம் பக்கம் பார்க்க)

மத்துகம, நூரளை பகுதிகளில் தொடர்ந்து மழை றப்பர் தோட்டங்களில் 9 நாள் மட்டுமே வேலை

மத்துகம,

மத்துகம பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதினால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மழை காரணமாக இப்பகுதியில் உள்ள றப்பர் தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை. இதுவரை ஒன்பது நாள்களே வேலை வழங்கப்பட்டுள்ளது.

மிகக் குறைந்த நாள்களே வேலை வழங்கப்பட்டுள்ளதால் இம்மாதத்திற்கான வேதனமாக ஒன்றும் மிஞ்சப்போவதில்லை. இந்நிலையில் எவ்வாறு வாழ்க்கையை நடத்துவது என்று தெரியவில்லையென மேற்படி தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

எனவே தமக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க தொடர்ந்து மழை பெய்வதனால் மத்துகம [illegible] வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

நூரளையிலும் கடும் மழை

நூரளை,

நுவரெலியாவில் கடந்த சனிக்கிழமை இரவு 9மணியில் இருந்து விடியற்காலை [illegible] மணி வரை கடும் மழை பெய்தது. நுவரெலியாவின் [illegible] பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட [illegible]பித்ததையடுத்து மாநகரசபை உறுப்பினர் சாஹுல் ஹமீட் நுவரெலிய மாநகரசபை [illegible]யர்கள் உதவியுடன் [illegible] தேக்க அணைக்கட்டை [illegible] நடவடிக்கை எடுத்தார். இதனால் [illegible] தடுக்கப்பட்டது.

மழை காரண[illegible]

"சைவசித்தாந்தத்தில் இறைதத்துவங்கள்" என்ற வண. கலாநிதி எட்வின் சவுந்தர நாயகத்தின் நூல் வெளியீட்டு விழா [illegible] வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் [illegible] தலைமையில் நடைபெற்ற போது, அறங்காவலர் பு. பாலசுந்தரத்திடமிருந்து நூலின் முதற் பிரதியை ஏ.[illegible] பெறுவதைப் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு: [illegible])